இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 161 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 08 – வியாழக்கிழமை 22 ஜனவரி 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 161 : Thiruvalluvar Year - 2057 - Thai 08 - Thursday 22 January 2026 - Chennai 12 Pages ₹ 5.00

## தன்னம்பிக்கையையும், ஒழுக்கத்தையும், அன்பையும், விடாமுயற்சியையும் போதிக்கும்

# ‘லிட்டில் பிளவர்’ சாதனைகள் மேலும் தொடரட்டும்!

### சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியின்

## நூற்றாண்டு விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுரை!

**சென்னை,ஜன.22-**

**“தன்னம்பிக்கையையும், ஒழுக்கத்தையும், அன்பையும், விடாமுயற்சியையும்போதிக்கும்லிட்டில்பிளவர்பள்ளியின் சாதனைகள் மேலும் தொடரட்டும்!” என்று, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.1.2026) சென்னையில் நடைபெற்ற சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப்பள்ளியின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:

சிறுமலர் பள்ளிக்கு நான் வருவது இது முதல் முறை அல்ல. 1984-ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து 40 ஆண்டு காலமாக இந்தப் பள்ளிக்கு வந்துதான் என்னுடைய ஒவ்வொரு பிறந்தநாளையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறேன். எந்த ஒரு நிறுவனமும், நூறாண்டு நிலைத்து நிற்பது என்பது மிகப் பெரும் சாதனை. அதுவும், மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற ஒரு கல்வி நிறுவனம் நூறாண்டு காண்பது என்பது பெருமைக்குரிய சாதனை.

**நூற்றாண்டு சாதனை!**

ஆசிய அளவில், இப்படி ஒரு சாதனையை செய்திருக்கக்கூடிய பள்ளிகளை விரல்விட்டு எண்ணிடவிடலாம். அப்படி, நூற்றாண்டு சாதனை மைல்கல்லை எட்டியிருக்கின்ற இந்த லிட்டில் பிளவர் பள்ளியினருக்கு என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இப்போது, நான் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தால், என்னை இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக அழைத்திருக்கிறார்கள் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. நான் எப்போதும் எந்தப் பொறுப்பில் இருந்தாலும், எந்தப் பதவியிலும் இல்லாவிட்டாலும் கூட, இந்த நிகழ்ச்சிக்கு நிச்சயமாக அழைக்கப்பட்டிருப்பேன். ஏனென்றால், லிட்டில்பிளவர்கான்வென்ட்டுக்கும், எனக்கும் அப்படி ஒரு நீண்ட நெடிய, ஆழமான உறவு இருக்கிறது. ஒருவேளை, நீங்களே அழைக்க மறந்தாலும், நான் உரிமையோடு வந்து உங்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பேன். மறக்கமாட்டீர்கள்! இப்போது கூட சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கின்ற சமயம். இருந்தாலும், லிட்டில் பிளவர் நூற்றாண்டில், தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று இங்கே வந்திருக்கிறேன். இங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள், படிக்கின்ற மாணவர்களுக்கு நான் புதுநபர் கிடையாது. இந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்ற மற்றவர்ளுக்காகத்தான் இந்த தகவல்களை சொல்லுகிறேன்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (211.2026) சென்னை, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளி நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் திருமதி ஏ.எஸ். குமரி, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சிறுமலர் மேல்நிலைப் பள்ளி முன்னாள் முதன்மை அருட்சகோதரி சவேரியா, முதன்மை அருட்சகோதரி ரோஸ்லைன், தாளாளர் அருட்சகோதரி ஜெம்மா, சிறுமலர் பார்வை குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளி முதல்வர் அருட்சகோதரி பெர்பைன், சிறுமலர் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை திருமதி நிர்மலா ராணி, ஆயிரம் விளக்கு பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் சிறுமலர் மேல்நிலைப் பள்ளி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**லிட்டில் பிளவர் பள்ளிக்கு ஒவ்வொரு ஆண்டும் வருகிறேன்!**

லிட்டில் பிளவர் பள்ளிக்கு, நான் சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன்; சென்னைக்கு மேயராகி வந்திருக்கிறேன்; உள்ளாட்சித்துறை அமைச்சராகி வந்திருக்கிறேன்; துணை முதலமைச்சராக இருந்து வந்திருக்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போதும் வந்திருக்கிறேன்; இப்போது முதலமைச்சரான பின்பும் தொடர்ந்து ஆண்டு தவறாமல் இந்த லிட்டில் பிளவருக்கு நான் வந்து கொண்டிருக்கிறேன். இப்போது மட்டுமல்ல; இனியும் வருவேன். எப்போதும் வருவேன்.

மார்ச் 1 அன்றைக்கு வந்தால், அதிக நேரம் இங்கே செலவிட முடியாது என்று இப்போதெல்லாம் சில முறை அதற்கு முதல் நாளே வந்து சென்றுவிடுவேன். அப்போது தான் நீண்ட நேரம் மழலைகளுடன் இருந்து, கேக் வெட்டி கொண்டாடுவேன். நான் மட்டுமா வருவேன்! என்னுடைய குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு வருவேன்! அந்த பிறந்தநாளை இங்கே இருக்கக்கூடிய குழந்தைகளோடு தான் கொண்டாடுவோம். அதுமட்டுமா! அவர்கள் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்பேன்; அவர்களுடன் மனம்விட்டு நான் பேசியிருக்கிறேன்; அவர்களுக்கு இனிப்புகள் நான் வழங்குவேன். இப்படிப் பட்ட உறவுதான் எனக்கும், என் குடும்பத்தினருக்கும் இந்த லிட்டில் பிளவர் பள்ளிக்குமான உறவு.

இந்த 40 ஆண்டுகளில், எத்தனையோ அழகான, நெகிழ்ச்சியான, பெருமிதமான உணர்வுகளையும் நினைவுகளை யும் இந்தப் பள்ளி எனக்கு கொடுத்திருக்கிறது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், ஒருமுறை இந்த பள்ளிக்கு பிறந்தநாள் கொண்டாட வந்தபோது, பெனோ ஜெஃபின் என்கிற மாணவியை நான் சந்தித்தேன். “அமெரிக்காவில் நடைபெறும் இளந்தலைவர்கள் மாநாட்டிற்கு நான் தேர்வாகியிருக்கிறேன் - நீங்கள் அமெரிக்கா செல்வதற்கு எனக்கு உதவி செய்ய வேண்டும்” என்று ஒரு கடிதத்தை வழங்கினார்.

அப்போது திமுக ஆட்சி நடந்து கொண்டிருந்தது. கலைஞர் முதலமைச்சர் - நான் உடனே அந்த கடிதத்தை பெற்றுக் கொண்டு, தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது அவரிடத்தில் எடுத்துச் சொல்லி, ஒரு சிறப்பு

> **மா**ற்றுத் திறனாளிகள் மட்டுமல்லாமல், இளம் பெண்களின் வாழ்வாதாரத்திற்காகவும் தொழில் முனைவோர் பட்டறை, தடுப்பு மற்றும் புனர்வாழ்வு மையங்களையும் அமைத்து, சமூகத்திற்கு பெரும் தொண்டாற்றி வருகிறீர்கள். மேலும், வீட்டு வேலை தொழிலாளர்கள் நலன், புலம்பெயர் தொழிலாளர்கள் நலன், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டெடுத்தல் உள்ளிட்ட பல பணிகளையும், தொடர்ந்து செய்துகொண்டு வரும் LFC–குழுவினருக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தன்னலமற்ற உங்களின் இந்த சேவை இன்னும் பல நூறு ஆண்டுகள் தொடர வேண்டும்.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

### தமிழ்நாடு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைதாவதை தடுக்க

# தூதரக நடவடிக்கைகளை உடனே எடுத்திடுவீர்!

## ஒன்றிய அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜன. 22 -**

**மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் நேற்று (21.01.2026) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மீனவர்கள் தொடர்ந்து இது போன்று கைது செய்யப்படு வதைத் தடுத்திடவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள், இரண்டு மீன்பிடிப் படகுகளில் வழக்கமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் 21.01.2026 அன்று சிறை பிடிக்கப்பட்டுள்ள மற்றொரு சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மீண்டும் மீண்டும் இதுபோன்று கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் இலங்கை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படுவதும் தடையின்றித் தொடர்வது மிகுந்த கவலைக்குரியதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இன்றுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த மொத்தம் 254 மீன்பிடிப் படகுகளும், தற்போதைய சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 90 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளதாகக் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தொடர்ச்சியாக நிகழும் இத்தகைய கைது நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமூகத்தினருக்குக் கடுமையான இன்னல்களை ஏற்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழக மீனவர்கள் இலங்கையில் நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், அவர்களது குடும்பத்தினருக்கு கடுமையான பொருளாதார நெருக்கடியினையும் தொடர்ச்சியான மன உளைச்சலையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும், இத்தகைய சம்பவங்கள், கடலோரப் பகுதிகளின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை ஆழமாகச் சீர்குலைத்துள்ளது என்றும் தனது கடிதத்தில் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் தொடர்ந்து நடை பெறுவதைத் தடுக்கவும், ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நச்சுப் பாம்பின் நாக்கில் அதிமுக!

